பரம ஸாரம் அத்தியாயம் பதினாலு

பகவான்–அர்ஜுன!மூன்று குணங்களின் ஸ்வரூபத்தைப் பற்றியும்,ஜீவனை அவை ஸம்ஸாரத்தில் பிணைத்து வைக்கும் பிரகாரத்தையும் இப்போது கூறுகிறேன்.

ஸத்வம்,ரஜஸ்,தமஸ் என்ற குணங்களை அறிபவன்,படிப்படியாக என்னைப் போலவே ஆவான்.அவன் மறுபடியும்,ஸ்ருஷ்டி காலத்தில் பிறக்க மாட்டான்;ப்ரளயகாலத்தில் அழியவும் மாட்டான்.

உலகங்களுக்கெல்லாம் காரணமான பிரகிருதி என்பது என்னுடையது அதாவது எனக்குச் சேஷம்.ஜீவராசிகளை அதில் நான் சேர்த்துவிடுகிறேன்.அதிலிருந்து எல்லாப் பிராணிகளுக்கும் பிறவி ஏற்படுகிறது.படைப்பின் தொடக்கத்தில் மாத்திரம்தான் நான் இவ்விதம் செய்கிறேன் என்று வேண்டும்.பிறகு தொடர்ந்து வரும் படைப்புக்களும் பிரகிருதி ஜீவர் இவர்களைக் கொண்டு என்னால் செய்யப்பெறுவனவே.

அர்ஜுனன்–"பரந்தாமா!ஸத்வம்,ரஜஸ்,தமஸ் என்பவை எங்கே உள்ளன?அவை ஜீவனை எப்படி ஸம்ஸாரத்தில் பிணைக்கின்றன? என்றான்.

மாதவன்–"பார்த்த!ஸத்துவம்,ரஜஸ்,தமஸ் என்று மூன்று குணங்களும் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பவை.இந்தப் பிரகிருதியின் கார்யம்தான் ஜீவர்களுடைய உடல் இந்திரியம் முதலானவை.இவற்றிலும் மூன்று குணங்கள் உள்ளன.பிரகிருதியில் சுருங்கிக் கிடந்த இந்தக் குணங்கள் அதன் கார்யமான சரீரேந்திரியாதிகளில் மலர்கின்றன.இயற்கையில் ஜ்ஞானஸங்கோதிகளுக்குப் ப்ரஸக்தியே இல்லாதவன் ஜீவன்.ஆனால் அவனே தன் கர்மாநுகுணமாக உடலைப் பெற்றிருக்கிறான்.உடல் ஸம்பந்தம் அவனுக்கு இருக்கிறபடியால் அதிலுள்ள குணங்கள் அவனைத் தமக்கு வசமாக்கிப் பற்பல அனர்த்தங்களுக்கு ஆளாக்குகின்றன.

அர்ஜுனன்–"வாஸுதேவ!ஸத்வம் என்ற குணத்தின் கார்யம் என்ன?அது எப்படி ஜீவனை ஸம்ஸாரியாக்குகிறது?" என்றான்.

பகவான்–பாண்டவ!ரஜோ,தமோ குணங்கள் ப்ரகாசம்,ஸுகம் இவற்றுக்கு இடைஞ்சலானவை. ஸத்துவம் அம்மாதிரியன்று.இது வஸ்துவின் உண்மையான தோற்றத்துக்கும் ஸுகத்துக்கும் காரணம்.இது வியாதியைப் போக்கும்.அளவான ஸத்துவம் நிறைய அறிவை ஸம்பாதிக்க வேண்டும்;பரம ஸுகமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கிவிடும்.இந்த ஜன்மத்தில் இவற்றைப் பெற முடியாமற் போனாலும் பல ஜன்மங்கள் பெற்றாவது இவற்றை ஸம்பாதிக்க வேண்டும் என்ற மனோபாவம் அவனுக்கு ஏற்படும்.அவற்றைப் பெற கர்மாக்களைச் செய்வான், பிறப்பான்;மறுபடியும் கர்மாக்களைச் செய்வான்.இவ்விதமே இவன் ஸம்ஸாரியாக இருப்பான்.வேதத்தை பரிபூர்ணமாக அத்தியயனம் செய்ய வேண்டும் என்ற ஆவலால் பரத்வாஜர் இந்திரனிடம் மேன்மேலும் ஆயுளை வேண்டிவந்தார் என்பது யாவரும் அறிந்ததே

அர்ஜுனன்–"கண்ணா!ரஜோகுணத்தின் கார்யம் என்ன?" என்றான்

பகவான்–"அன்பனே!ஆணுக்கும் பெண்ணுக்கும் பரஸ்பரம் இருக்கும் அளவு கடந்த ஆசைக்குக் காரணம் ரஜோகுணம்.ஸப்தாதி விஷயங்களில் இருக்கும் ஆசைக்கும்,புத்திரன் முதலானவர்களிடம் இருக்கும் பற்றுக்கும் இந்த ரஜோகுணமே காரணம்.இந்தக் குணம் பலனைப் பெறுவதற்கான கர்மாக்களில் முனையச் செய்து ஜீவனை ஸம்ஸாரியாகவே ஆக்குகிறது" என்றான்.

அர்ஜுனன்–"கண்ணா!தமோகுணத்தின் காரியம் என்ன?" என்றான்.

## பரம ஸாரம் அத்தியாயம் பதினாலு

பகவான்—விஜய!தர்மத்தை அதர்மம என்று நினைப்பது,அதர்மத்தை தர்மம் என்று நினைப்பது போன்ற விபரீத ஜ்ஞானம், பாவகாரியங்களைச் செய்வித்துத் தமஸ்ஸை உண்டாக்குகிறது.இந்தத் தமஸ் எல்லா ஜந்துக்களுக்கும் விபரீத ஜ்ஞானத்தை உண்டாக்குகிறது.உன்னிப்பின்மை,சோம்பல்,தூக்கம் இவற்றை உண்டாக்கி ஜீவனை ஸம்ஸாரத்தில் பிணைத்து வைக்கிறது.உன்னிப்பு இல்லாதவன் கர்மாக்களை ஏனோ தானோ என்று செய்வான்.அதனால் பல விபரீதங்கள் ஏற்படலாம்.சோம்பேறி எந்த நல்லக் காரியத்தையும் உரிய காலத்தில் செய்ய மாட்டான்.எப்பொழுதுமெ உறங்குபவனுக்கு, தெளிவான அறிவை ஸம்பாதிக்கவோ, ஸத்கர்மாக்களைச் செய்வதற்கோ ஸந்தர்ப்பமே இருக்காது" என்றான்.

அர்ஜுனன்—"கண்ணா!ஜீவர்களின் உடல் இந்திரியம் முதலானவை பிரகிருதியின் பரிணாமங்களே.ஆக அவற்றில் எப்பொழுதுமே மூன்று குணங்களும் இருக்கும்.குணங்களின் காரியமோ பரஸ்பரம் விருத்தமானவை.ஸத்துவத்தின் காரியம் தெளிவான ஜ்ஞானம்.தமஸ்ஸின் காரியமோ விபரீத ஜ்ஞானம்.இதே போலவே விபரீதமான அம்சங்களுக்குக் காரணமான மூன்று குணங்களும் ஒரே சமயத்தில் இருந்தால் தெளிவான ஜ்ஞானம் ஸம்பவிக்குமா?விபரீத ஜ்ஞானமா? ஸுகமா? துக்கமா?" என்றான்

வாஸுதேவன்—"பாண்டவ!சரீராதிகளில் மூன்று குணங்களும் எப்பொழுதும் இருக்குமே தவிர ஒரே அளவில் இருக்க மாட்டா.ஒரு சமயம் ஒன்று மற்ற இரண்டையும் அடக்கி வளரும்.குணங்களின் மாறுபாட்டுக்குக் காரணம் புண்ணிய பாவங்களும்,உண்ணும் உணவும்தான்.எப்பொழுது எதன் கை ஓங்குகிறதோ அப்பொழுது அதன் காரியம் ஸம்பவிக்கும்."என்றான்.

அர்ஜுனன்—"கண்ணா!எந்தக் குணம் எப்பொழுது விருத்தி அடைந்திருக்கிறது என்பதை எப்படி உணர்வது?" என்றான்.

பகவான்—"பக்தனே!எப்பொழுது ஜ்ஞானேந்த்ரியங்களான கண்,காது முதலியவற்றால் ரூபம்,சப்தம் உள்ளது உள்ளபடி உணர்த்தப்பெறுகின்றனவோ அப்பொழுது ஸத்துவ குணம் வளர்ந்திருக்கிறது என்பதை உணரலாம்.

தனது திரவியத்தை தியாகம் செய்யா மனமில்லாமை,பலனைக் கருதியோ கருதாமலோ செயற்பட்டுக்கொண்டே இருத்தல்,சிற்றின்பங்களில் ஆசை, புலனை அடக்காதிருத்தல் ஸம்பவித்தால் ரஜஸ் வளர்ந்துள்ளது என்று உணரலாம்.

அறிவு உண்டாகாமை,செயலில் ஜாக்கிரதை இல்லாமை,விபரீதமான உணர்வு நேர்ந்தால் தமஸ் வளர்ந்துள்ளது என்று கூறலாம்.

அர்ஜுனன்—"பரந்தாமா!உயிர் போகும் தறுவாயில் ஏற்படும் குணமாற்றத்துக்குக் காரணம் என்ன? என்றான்.

கிருஷ்ணன்—"கௌந்தேய!ஸத்துவ குணம் வளர்ந்துள்ள ஸமயத்தில் மரிப்பவன் ஆத்ம ஸ்வரூபத்தைத் தெளிவாக அறிந்தவர் குலத்தில் பிறப்பான்.தெளிவான அறிவை ஸம்பாதிப்பான்.பகவதாரனமான கர்மாக்களைச் செய்து பரமஸாத்துவிகனாய் ஆத்ம ஸாக்ஷாரத்தையே பெற்று மிகவும் உயர்ந்து விடுகிறான்.

ரஜோகுணம் வளர்ந்துள்ள தருணத்தில் இறப்பவன் பலனைக் கருதி கர்மாக்களைச் செய்பவர்களின் குலத்தில் பிறப்பான்.ரஜஸ் மேன்மேலும் வளரும்.ஸ்வர்க்கம் செல்வான். கீழே இறங்குவான்.மறுபடி கர்மாவைச் செய்வான்.இம்மாதிரியே இரண்டும் கெட்டானாய்த் திண்டாடுவான்.

தமஸ் விருத்தியடைந்துள்ள நிலையில் சாகிறவன் ஆத்ம ஸவரூபத்தை அறிவதற்கே பிரஸக்தி இல்லாத நாய்,பன்றி முதலிய பிறவிகளில் பிறந்து

புருஷார்த்தத்தையும் பெறுவதர்க்கான தகுதி இல்லாமலே பாவியாவான். உயர்ந்த வகுப்பினன், தாழ்ந்த குலத்தில் பிறப்பான். அடுத்தது மாடு முதலியனவாகப் பிறப்பான். பிறகு புழு, பூச்சியாகவும், பிறகு மரம், புதர் முதலியனவாகவும், மிறகு கல், கட்டை முதலியனவாகவும் பிறப்பான். மேலும் மட்டமான பிறவி எடுத்து ஸம்ஸார ஸாகரத்திலேயே மூழ்கிக் கிடப்பான்.

அர்ஜுனன்-"எம்பெருமானே! ஸம்ஸாரியான ஜீவன் ஸத்துவம் முதலிய மூன்று குணங்களுக்குப் பரவசனாகாமல் உன்னைப் பெறுவதற்கான வழி என்ன?" என்றான்.

பகவான்-"அர்ஜுன! நாம் எந்தச் செயல் செய்தாலும் நாமாகச் செய்யவில்லை. குணங்களே செய்கின்றன; நாமன்று என்று தெளிபவன் மூன்று குணங்களைக் கடப்பான். பிறப்பு, இறப்பு, முதுமை, துக்கம் இவற்றிலிருந்து விடுபட்டு அழிவற்ற ஆத்மஸவரூபத்தை அநுபவிப்பான்" என்றான்.

அர்ஜுனன்-"வாஸுதேவ! 'நாம் பரம் ஸாத்துவிகனா? என்பதை உணரும் அம்சங்கள் யாவை? பாஹ்யமான ஆசாரங்கள் யாவை? முக்குணங்களைக் கடக்க முக்கிய உபாயம் என்ன?" என்றான்.

பகவான்-"பாண்டவ! ஸத்துவத்தின் காரியம் வஸ்துப்ரகாசம். ரஜஸ்ஸின் காரியம் அஜ்ஞானம் விபரீதஜ்ஞானம் முதலியன. இவற்றில் நேர்ந்த சிலவற்றை வெறுப்பதும் விலகிய சிலவற்றை விரும்பாதவனாகவும் இருக்கும் அதிகாரியே குணங்களைக் கடந்தவன். வேண்டாத வஸ்து கண்ணுக்குப் பட்டால் வெறுப்பதும், வேண்டியதைக் காண விரும்புவதும் இல்லாமல் எதிலும் ஒரே மாதிரி இருப்பவனே குணங்களைக் கடந்தவன்" என்றான்.

அர்ஜுனன்-கண்ணா! தேஹ ஸம்பந்தமுள்ளவன் இஷ்டாநிஷ்ட ஸாதனங்களில் எவை ஸம்பவித்தாலும் விகாரமற்றவனாக எப்படி இருக்க முடியும்?

பகவான்-அர்ஜுன! ஆத்மாவலோகனத்தில் ஏற்படும் திருப்தியினால் மற்ற விஷயங்களில் ஈடுபாடற்றிருக்க வேண்டும். மற்ற விஷயங்களில் பற்றே இல்லாதவனுக்கு அவற்றில் விருப்போ வெறுப்போ ஸம்பவிப்பதற்குப் பிரஸக்தி இல்லையே, ஆகவே ஸத்துவாதி குணங்கள் விருப்பு, வெறுப்பு மூலம் இந்த அதிகாரியைச் செயற்படுத்த முடியாது.

ஆத்மாவே பிரியமாகையால் மற்றவை கிடைத்தால் ஸந்தோஷமோ கிடைக்காமற்போனால் வருத்தமோ சம்பவிக்க பிரஸக்தி இல்லையே. மண்ணாங்கட்டி, கல், தங்கம் இவையெல்லாம் இவனுக்கு ஸமமே.

"உடம்பு முதலியவற்றைவிட ஆத்மா வேறானவன்" என்று பகுத்தறிவதில் இவன் திறன் பெற்றவன். ஆகையால் உடலைப்பற்றி பிறர் துதித்தாலும், நிந்தித்தாலும் இவனுக்கு ஸந்தோஷமோ வருத்தமோ ஏற்படுவதில்லை. இந்த அதிகாரி பிறர் தன்னை கௌரவித்தால் அவரைத் தனக்கு மித்திரராகவும், அகௌரவித்தால் விரோதியாக நினைக்க மாட்டான். ஆத்மாவை பெற ஸாதனமான கர்மா தவிர மற்ற எதிலும் முனைய மாட்டான்.

காம க்ரோதங்களற்றிருப்பது முதலிய ஆந்தரமான வியாபாரங்களால் 'நாம் குணபரவசரல்ல' என்பதை உணரலாம். ஸாம்ஸாரிகங்களான ஸகல வியாபாரங்களையும் தவிர்த்திருத்தல் முதலிய பாஹ்ய சிஹ்நங்களால் 'அவர் குணாதீதர்' என்பதை அறியலாம்.

ஸத்ய ஸங்கல்பனாகவும், பரம காருணிகனாகவும், ஆச்ரிதவத்ஸலனாகவும் இருக்கும் என்னை உத்தேசித்தே ஸாங்கமான பக்தியைச் செய்பவன் முக்குணங்களைக் கடந்து பரம போக்கியமுமான தன் ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிப்பான். பலனைக் கருதாமல் பக்தியைச் செய்ய வேண்டும்.

பரம ஸாரம் அத்தியாயம் பதினாலு

என்னிடமும் பக்தி, மற்றவனிடமும் பக்தி என்ற நிலை இல்லாமல் என்னிடமே பக்தி செய்ய வேண்டும். முக்குண மாயையைக் கடப்பதற்கு இப்படிப்பட்ட பக்தியே முக்கிய ஸாதனம்.

அர்ஜுனன்—"ஜனார்த்தன! மோக்ஷத்தைத்தான் நீ அளிக்கிறாய் என்று கூறுகின்றனரே இப்படியானால் ஐச்வர்யம், கைவல்யம் இவற்றை அளிப்பவர் யார்?" என்றான்.

பகவான்—"நண்பனே! ஐச்வர்யம், கைவல்யம், மோக்ஷம் இவை யாவற்றையும் அளிப்பவன் நானே. இந்த விஷயத்தில் ஐயமே வேண்டாம்" என்றான்.

பதினாலாம் அத்தியாயத்தின் பரம ஸாரம் முற்றும்